[2003 ஏப்ரல் 3

174—

தமிழ்த் திரைப்படங்கள்

***11100—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடாத திரையரங்குகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை நகரிலுள்ள அனைத்துத் திரையரங்குகளிலும் தமிழ்ப் படங்கள் முறையாகத் திரையிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு திரையரங்குகள் விதிகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் எங்கும் தமிழ் பரவிட, அறிவியல் தமிழை அறிவித்து, தமிழுக்குப் பெருமை சேர்த்து தமிழன்னையாக வீற்றிருக்கின்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினார். சென்னை மாநகரில் எங்கு பார்த்தாலும் ஆங்கிலப் படங்களும், வடமொழிப் படங்களும்தான் ஆண்டு முழுவதும் அதிகமாக ஓடிக்கொண்டிருக்கின்ற நிலையை மாற்றிட, ஏற்கெனவே நடைமுறையில் இருந்த, கட்டாயம் திரையரங்குகளில் வருடத்திற்கு 12 வாரங்கள் தவறாமல் தமிழ்ப் படங்களைத் திரையிட வேண்டும் என்ற உத்தரவை மீண்டும் வலியுறுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2003 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திரையரங்குகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1955, 'சி' படிவ உரிமை நிபந்தனை 7(ஏ)-ன் அடிப்படையில், ஓர் ஆண்டில் 12 வாரங்களுக்குக் குறையாமல், தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்பட வேண்டும் என்ற விதிமுறைகளை மீறும் திரையரங்கின்மீது, உரிமம் வழங்கும் அலுவலரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட விதியை எதிர்த்து, சென்னையிலுள்ள மெலோடி திரையரங்கம் மற்றும் மதுரையில் உள்ள மாணிக்க விநாயகர் மற்றும் மாப்பிள்ளை விநாயகர் திரையரங்க உரிமையாளர்கள், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து, 9-3-2001 நாளிட்ட உயர் நீதிமன்றத் தீர்ப்பில் அவர்களுடைய வழக்கினைத் தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து இத்திரையரங்க உரிமையாளர்கள் புதுடெல்லியிலுள்ள உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளனர். அவ்வழக்கிற்குத் தேவையான எதிர் வாதுரை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு வழக்கறிஞருக்கு அனுப்பப்பட்டு அரசு சார்பாக வாதிடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

முற்பகல் 11-00

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: உச்ச நீதிமன்றத்தில் மேற்குறித்த வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல சென்னை மாநகரத்தில் தமிழ்ப்படங்கள் ஓடாத திரையரங்குகள்மீது புகார்கள் வருமேயானால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(<u>குறிப்பு</u>: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)